**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**வாரப் பாடசாலை**

**பாடம் - பொருளியல்**

**வாரம் - 01**

**தரம் - 12**

**தயாரிப்பு - இரத்தினபுரி வலயக்கல்வி அலுவலகம்**

**தேர்ச்சி 01 –** பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1 –** பொருளியலின் அடிப்படையைப் பரிசீலனை செய்வார்.

- மனிதன் உயிர் வாழ்வதன் பொருட்டு அவசியம் நிறைவு செய்ய வேண்டிய அதிகுறைந்த வசதிகளே மனித தேவைகள் ஆகும். இத் தேவைகள்,

1. பௌதீகத் தேவைகள்
2. உளவியல் தேவைகள் என வகைப்படும்.

- பொருட்கள் சேவைகளை நுகர்வதன் மூலம் பூர்த்தி செய்யக் கூடிய தேவைகள் பௌதீகத் தேவைகள் எனப்படும்.
  உ.ம் :- உணவு, உடை, வீடு

- பொருட்கள் சேவைகளை நுகர்வதன் மூலம் பூர்த்தி செய்ய முடியாதவை அதாவது உளவியல் ரீதியாக அடையப்பட வேண்டிய நலன்கள் உளவியல் தேவைகள் ஆகும். உ.ம்:- இரக்கம், கருணை, அனுதாபம்

**பொருளாதார நடத்தை**

- சமூகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி மனிதன் தனது பௌதீகத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய மேற்கொள்ளும் செயற்பாடுகளும் நடத்தைகளும் பொருளாதார நடத்தையாக கருதப்படும். உ.ம்:- பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, பங்கீடு, முதலீடு.

- சமூகத்தில் மக்களுக்கிடையில் பல்வேறு விதமான நடத்தைகள் காணப்படுவதுடன் மனிதனின் பொருளாதார நடத்தை தொடர்பான ஆய்வு பொருளியல் மூலம் இடம்பெறும்.

**பயிற்சிகள்**

1. பொருளியலை ஓர் விஞ்ஞானம் எனக் கருதுவது ஏன்?
2. பொருளியலானது ஏனைய இயற்கை விஞ்ஞானங்களிலிருந்து வேறுபடுவதற்கான காரணங்களைத் தருக.
3. பொருளியல் ஆய்விற்கு உட்படுகின்ற “ பொருளாதாரக் கண்ணோட்டம்” என்பதனால் கருதப்படுவது யாது?